## பாகம் - 2

### 6. நிதிநிலை ஆய்வு

#### 6.1.1. 2017-2018ஆம் ஆண்டிற்கான வருவாய் செலவு கணக்கு பொது ஆய்வு.

2017-2018ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட மொத்த வருவாய் மற்றும் மொத்த செலவுகள் முறையே ரூ. 818.83 இலட்சம் மற்றும் ரூ. 890.33 இலட்சங்களாகும். மொத்த வருவாய் மற்றும் மொத்த செலவில் பல்வேறு தலைப்புகளின் பங்கு கீழே கணக்கிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

**வருவாய்**

| வ.எண். | கணக்கு குறியீட்டு எண் | இனம் | தொகை (ரூ.இலட்சத்தில்) | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | 110 | சொத்துவரி | 67.00 | 8.18 |
| 2. | 120 | ஒதுக்கப்பட்ட வருவாய் | 14.18 | 1.74 |
| 3. | 130 | வாடகை கட்டணங்கள் | 8.71 | 1.06 |
| 4. | 140 | கட்டணங்கள் | 8.55 | 1.04 |
| 5. | 150 | விற்பனைக் கட்டணங்கள் | 13.14 | 1.60 |
| 6. | 160 | மான்யங்கள் | 702.25 | 85.77 |
| 7. | 170 | முதலீடு மூலம் வரவு | 2.26 | 0.28 |
| 8. | 171 | வட்டி வரவு | 0.27 | 0.03 |
| 9. | 180 | இதர வரவு | 2.47 | 0.30 |
| | | மொத்தம் | 818.83 | 100 |

**செலவு**

| வ.எண். | கணக்கு குறியீட்டு எண் | இனம் | தொகை (ரூ.இலட்சத்தில்) | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | 210 | பணியாளர் (ஓய்வூதியர் உட்பட) | 321.09 | 22.72 |
| 2. | 220 | நிர்வாகச் செலவு | 30.46 | 3.06 |
| 3. | 230 | பழுது மற்றும் பராமரிப்பு | 141.74 | 13.35 |
| 4. | 240 | நிதிச் செலவுகள் | 0.06 | 0.00 |
| 5. | 250 | திட்டச் செலவுகள் | 1.10 | 0.10 |
| 6. | 260 | பங்களிப்பு | 11.06 | 1.36 |
| 7. | 270 | ஐயப்பாடுடைய செலவு | 0.02 | 2.48 |
| 8. | 272 | தேய்மானம் | 407.45 | 52.31 |
| 9. | 280 | முந்தைய ஆண்டு செலவு | –22.65 | 4.62 |
| 10. | 290 | மூலதன பங்களிப்பு | 0 | 0 |
| | | மொத்தம் | 890.33 | 100 |

6.1.2

2017-2018ம் ஆண்டில் ஈட்டப்பட்ட வரவினத்தை விடச் செலவினம் ரூ.71.5 இலட்சம் கூடுதலாக உள்ளது. ஐயத்திற்கிடமான வருவாயினங்களுக்கான ஒதுக்கீடு ரூ.55.00 இலட்சம் ஆகும். தேய்மானக்கணக்கில் செலவு எழுதியது ரூ.407.45 இலட்சம் நீங்கலாகக் கணக்கிட்டால் ஈட்டப்பட்ட வரவினம் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை விட ரூ.462.46 இலட்சம் கூடுதலாக உள்ளது.

6.1.3.

01.04.2017 அன்றிருந்த திரண்ட பற்றாக்குறை ரூ.847.87 இலட்சம் 31.03.2018 அன்று ரூ.920.17இலட்சம் எனக் கூடியுள்ளது. இது இந்நிறுவனத்தின் பாதகமாக நடவடிக்கையைப் பிரதிபலிக்கிறது.

Scanned by CamScanner